**அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி**

(தேசியதர நிர்ணயக் குழுவின் மறுதர மதிப்பீட்டிலும் "ஏ"தகுதி பெற்றது)

நாள் :3.2.2017

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் இரண்டாம் நிலை காவலர் பதவிக்கான 15,711 காலிப்பணியிடங்களை பொது எழுத்துத் தேர்வு, உடல் தகுதி மற்றும் உடல் திறன் தேர்வின் மூலம் நிரப்ப உள்ளது. இந்த எழுத்துத் தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசிநாள் : 22.02.2017. இதற்கான எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் வருகிற 21.05.2017.

சீருடைப் பணியாளர் (காவலர்) தேர்வை எளிதில் எதிர்கொள்ளும் வகையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டம் (Study Circle) சார்பில் இலவச பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு (உடற்கல்வி +பொதுஅறிவு +உளவியல்) ஒருங்கிணைந்து நடத்தப்பட உள்ளது.

இதற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் 11.02.2017 முதல் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள் பழனியப்ப செட்டியார் நினைவரங்கத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்திற்கு நேரில் சென்று பெயரை பதிவுசெய்து கொள்ளலாம், அல்லது 04565-223266 என்ற தொலைபேசியிலோ, 86759-74989 என்ற அலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம். மேலும், alagappauniversitystudycircle@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவும் பதிவு செய்யலாம்.

பேரா.வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)